# கவிதை

## காலம்

இன்று வந்தது
நாளையும் வரும்
ஆனால் நேற்று வராது
மூடிக்கொண்ட கதவு அது
திறந்து பார்க்க சாவியும்
இல்லை
சேர்த்து வைக்க வழியும்
இல்லை
துரத்திப் பிடிக்க ஓடுவோம்
எங்கே தான் போய் விடும்
நாம் இவ்வுலகை விட்டுப் போகும் முன்னர்
இந்த நேரத்தைத் துரத்திப் பிடிக்கலாம்
நேரத்தின் பின்னால்
ஓடிப்போவோம் வாருங்கள்
வேகமாய் ஓடுவோம், விரைவாய் ஓடுவோம்
நேரம் போகிறது, ஓடுவோம் வாருங்கள்

- புஸ்பா கிறிஸ்ரி

## வேதனையும் விரிந்த மலர்

தாமரை மொட்டொன்று
தடாகத்தின் மேல்தட்டில்
வெடிக்கும் விடலையாய்
கூர் குவிந்து அசைந்தபடி
இதழ்களில் மோதியும்
முடியாமல் உள்ளுக்குள்
நறுமணம் நகராமல்
மொட்டுக்குள் முழுவதுமாய்
மொட்டுக்கு வேதனை
விரிந்தால்தான் விடுதலை
அருகருகே விரிந்த பூக்கள்
தேறுதலும் சொல்லாமல்
பூவைச் சுவைக்கவென்று
சுழலும் முறைவண்டு
வெடிக்கட்டும் மொட்டென்று
விடியலைக் காத்திருக்க
அசைந்தசைந்து சிமிட்டினாலும்
சுண்டிவிடு நுனியையென்று
இளவண்டும் புரியாமல்
இதழ்விரித்த பின்னேயென
மொட்டுவிட்ட பெருமூச்சோடு
அலையுமொன்று ஆட்டிவிட
வெடித்தது மொட்டு
சிவந்த இதழ்களோடு
நறுமணமும் வீச்சோடு
நாற்புறமும் வீச
வேதனையும் மெல்லமெல்ல
விடுதலை ஆனது

- வ.கணேஸ்

## தரிசனம்

நிலாவைக் காட்ட நீண்டது விரல்
எவ்வளவு அழகான விரல்“ என்றான் ஒருவன்
“நகம் முத்துச்சிப்பியைப்போல் இருக்கிறது“ என்று
கவிதை புனைந்தான் ஒருவன்
அது ஒன்றுக்குப்போகவேண்டும் என்கிறது“
என்றான் ஒருவன்
“இல்லை அது அதட்டுகிறது“ என்றான் ஒருவன்
ஒரு மோதிரம் கொண்டு வந்து போட்டான் ஒருவன்
மருதாணி தடவினான் ஒருவன்
ஞாபக முடிச்சிட்டான் ஒருவன்
விரலின் ரேகைகளில் பயணம் செய்தார்கள் சிலர்
பிறகு–விரல் வெட்டியெடுக்கப்பட்டு பிரதிஷ்டை
செய்யப்பட்டது.
ஆரம்பமாயின வழிபாடுகள்
ஆனால் யாரும் பார்க்கவில்லை நிலாவை

- அப்துல் ரகுமான்

## உறைந்த நினைவுகள்

மலரென்று உனை எண்ணி மனதினில்
வைத்திருந்தால்
பிரிவென்று வரும்போது
பெருந்தணலாய்ச்சுடுகின்றாய்
கூடி இருக்கையிலே குளிர்நிலவாய்த்தானிருந்தாய்
பக்கம் இல்லாது பகலவனை மிஞ்சுகின்றாய்
கோடைகாலங்கள் இன்னல் பல தருகையிலே
வசந்தமாய் உன் நினைவு வந்து வந்து
போகின்றது
காரிருள் என் மீது கவிழ்ந்து கிடக்கையிலே
விளக்காய் வெளிச்சம் தந்து வேறெங்கோ நீ
மலரோடு மரங்கள் அழகாகத்தானிருக்கும்
வேர்கள் இல்லையெனில் அது விறகாகிப்
போயிருக்கும்
உன் நினைவு எப்போதும் எனக்குள்ளே
உறைந்திருக்கும்
அது சுத்தமான காற்றாகி என் சுவாசம்
நிறைந்திருக்கும்

- சந்தியா

## ஞானம்

ஞானம் பெற்றது
நீ–உன்மண்ணில் பள்ளிக் கூடங்கள்
கட்டப்பட்டதால்
நான்–என் மண்ணில் பள்ளிக்கூடங்கள்
இடிக்கப்பட்டதால்.

- கவிஞர் காசி ஆனந்தன்

## அவைக்(கு) அஞ்சாச் சிங்கமே

அவைக்கஞ்சாச் சிங்கமே! அண்ணன் பாலசிங்கமே!
இதயத்தில் இடி விழுந்தது!
எம் தேசத்தின் குரல் ஒடிந்தது!
விடியும் வேளையில் விளக்கு அணைந்தது!–புலிக்
கொடியும் இறங்கி அரைக் கம்பத்தில் பறந்தது!
ஈழத்தின் அரசியல் யாப்பை எழுத வேண்டியவனே!
எப்படித் தாங்குவோம் உன் இழப்பை!
தமிழீத்தில் இன்னொரு சுனாமியாய் உன் இழப்பு!
நீ இல்லாத பேச்சுவார்த்தைக் களம்!–அது
நீர் இல்லாத குளம்!
நோய் வந்த போதும்–புலிக்கு
ஓய்வு மரணத்தில் தான்!–என்று
சிரித்தபடியே நீ செப்பியதை!
நினைத்துப் பார்க்கவே முடியவில்லை!–நான்
நினைக்கிறேன் இனிப்பேச்சு வார்த்தை இல்லை!
பேச வேண்டியதெல்லாம் நீ பேசி விட்டாய்!
பேச்சுக்கு இனி ஓய்வு–அதனால் தானோ–நீ
எடுத்து விட்டாய் ஓய்வு!–நீ
பேச வருகின்றாய் என்றால்
எதிரிக்கு குலை நடுக்கம்!–உன்னை
எதிர்க்கப் பயிற்சிப் பட்டறை!–உன்னை
மடக்கப் பத்திரிகையாளர் படை!–வந்தவர்க்கும்
வகுப்பெடுத்து வழங்குவாய் விடை!
என்னே உன் நடை!
நக்கல் இருக்கும்! நளினம் இருக்கும்!
குத்தல் இருக்கும் கூர்மை இருக்கும்!–கொண்ட
இலட்சியக் கொள்கை இருக்கும்!–குறை
காணாத சட்டம் இருக்கும்!
சர்வதேச சட்ட நுணுக்கம்–உன்
சட்டைப் பைக்குள் தானே அடக்கம்!
தேசியத் தலைவன் ஆற்றிடும் உரைதனை!
அக்குவேறு ஆணி வேறாக!
பிரித்துப் பிரித்து விளக்க விளக்க!
இலை மறை காயாய் இருக்கும்!–அந்த
சூட்சுமப் பொருளைச் சொல்லச் சொல்ல!
சொல்லால் கட்டுண்டு சொக்கிக் கிடப்போமே!
இடைக்கிடை சிரிப்பலை எழுந்து அடங்குமே!
இரண்டுஆண்டாய் இல்லையே உன் தரிசனம்!
சிரித்திருக்கும் சிரிப்பெங்கே!
செந்தமிழின் வனப்பெங்கே!
சிந்தனையின் சிறப்பெங்கே!
சீறி எழும் நாவெங்கே!
அவைக் கஞ்சா சிங்கமே!
அண்ணன் பாலசிங்கமே!
அரசியல் பெட்டகமே!
அறிவியல் நூலகமே!–அழுகின்றோம்
அன்பாளா! பண்பாளா! ஆளுமைச் சிறப்பாளா!
ஆற்றாத தவிப்பாளா! அயராத உழைப்பாளா!
உள்ளத் துடிப்பாளா! உறவென்ற நினைப்பாளா!
உலகத்து மதிப்பாளா!
உணர்ச்சிக் கொந்தளிப்பாளா!
தலைவனின் நட்பாளா! தத்துவத் தொகுப்பாளா!
வித்துவச் செழிப்பாளா! விகடச் சிரிப்பாளா!
பேச்சு வனப்பாளா! பிற பிற நினைப்பாளா!
தேசத்தின் குரல்பாளா! திருக்குறளின் அறப்பாளா!
தமிழன்னை மறப்பாளா! தமிழன்னை மறப்பாளா!
மாவீரனே! மாவீரனே!
உறுதியுடன் உரைக்கின்றோம் ஈழம்!
உனக்கே காணிக்கை!!!

- நாரந்தனையூர் கவிநயன்




ஸ்ரீ துர்க்காதேவி ஜோதிடம்
தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள்

Mob: 07947 781 197
07857 414 342

Mobile inn
320,London Road, West Croydon
Surrey CR0 2TJ
(opposite Best Food super Market)
(Near Mithus Gold House)

திருமணப் பொருத்தம் சாதகம் குறித்துக் கொடுக்கப்படும்.

23 வருட அனுபவம் நிறைந்த இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள தேவேந்திரன் சாஸ்திரி அவர்கள் துர்க்கா அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள், கணவன் மனைவி ஒற்றுமை,கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம்,கண் திருஷ்டி,கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பிறந்த பிள்ளைகளின் ஜாதகம் கணித்துக் கொடுக்கப்படும், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

**Devendran Sastry**

23 Years expert pandit at service, past, presents and future of your life, will be read over to you from your numerology, face reading, palm reading & horoscope reading prediction in Business, Education, job, Love, Marriage, Family problem, Court problems, Visa requirements, Sickness, Promotion, abroad, Money, Removal all type of black magic and evil things by performing prayers, Devi Upasana, Luxmi pooja also protecting from enemies and jealousy Protection for self, House Business, Spoken Languages: Tamil, Hindi & English.

Call: **07947 781 197** or **07857 414 342**

Opening Hours: 9.30am to 8.30pm 7 Days a week